## தலைப்பு 2 – பிரதம அமைச்சர் அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) பிரதம அமைச்சர் அலுவலகத்தால் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 33 மீண்டெழும் செலவினங்களிற்குரிய ஒவ்வொரு செலவின விடயத்திலும் நிதியேற்பாடுகளின் சேமிப்புக்கள் 21 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அச் சேமிப்புக்கள் மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் 50 சதவீதமாக காணப்பட்டன. | வருடாந்த மதிப்பீடுகள் உண்மையானதாக தயாரிக்கப்பட வேண்டும். | செலவினங்களை இழிவாக்கும் வகையில் முகாமை செய்வதற்கு சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்படாமை மற்றும் கட்டுப்படுத்த முடியாதிருந்த நிலைமைகளில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்த முடியாதிருந்தமை காரணமாக நிதியேற்பாடுகளில் சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. |
| (ஆ) ரூபா 177,000,000 தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடுகள் மீண்டெழும் செலவின விடயமொன்றிற்காக பெறப்பட்டிருந்ததுடன் அந் நிதியேற்பாட்டில் 67 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கட்டுப்படுத்த முடியாதிருந்த நிலைமைகள் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாதிருந்தமையால் நிதியேற்பாடுகளில் சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. |

## 2.2 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டு காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 202,366 தொகையான கடன் மீதி காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நிலுவைக் கடன்கள் அறவிடப்பட வேண்டும். | ரூபா 199,866 தொகையான இடர் கடன் மீதியையும் 2019 மே தொடக்கம் கடன்பட்டோரின் இரண்டு பிணைதாரர்களிடமிருந்து அவற்றின் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 2,500 தொகையான விழா முற்பணங்களை தீர்ப்பனவு செய்யுமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிறைவேற்றப்படாத கடமைப்பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2,500 கிராமிய அரச பிரிவுகளின் ஸ்தாபிப்பு மற்றும் பொதுச் சேவை விநியோக அதிகாரசபையின் (Public Service Delivery Authority) ஸ்தாபிப்பு ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்டவாறு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதுடன் அவற்றிற்கான விடயங்கள் எதிர்காலத்திற்காக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) Millennium Challenge Corporation செயற்திட்ட அலுவலகத்தால் 2018 திசெம்பரில் காணி நிர்வாக செயற்திட்டம் மற்றும் போக்குவரத்து அபிவிருத்திச் செயறதிட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான உடன்படிக்கைகளை | - மேற்படி - | 2018 ஆம் ஆண்டின் செயற்பாடொன்றாக இதனை உள்ளடக்குவதன் மூலம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஆரம்ப உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட முன்மொழிவுகளை பகுப்பாய்வு செய்து செயல்நடவடிக்கைத் |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டத்திற்கு செயற்திட்டம் தொடர்பாக இனங்காணப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. |
| (இ) | சர்வதேச கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டின் கீழான ஆரம்பச் செயலாற்றல் 4 சதவீதமாக காணப்பட்டது. | - மேற்படி - | ஆண்டின் போது நிறைவேற்றப்படுகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக முன்னரே திட்டமிடப்பட முடியாதிருந்தது எனும் தகவல்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடு 02 ஆக அறிக்கையிடுவதற்கும் செயலாற்றல் அறிக்கையின் அத்தியாயம் 03 இன் மூலம் செயன்முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | தேசிய நல்லிணக்கம், சமய அலுவல்கள் மற்றும் சமூக சேவை செயற்பாடுகளின் கீழான நிதிச் செயலாற்றல் 47 சதவீதமாகவே காணப்பட்டது. | - மேற்படி - | மதிப்பீடுகள் மற்றும் இது தொடர்பாக ஏற்பட்ட ரூபா 26.1 மில்லியன் தொகைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் தொடர்பாக அத்தியாயம் 05 இல் விளக்கமளிக்கப்பட்டிருந்தது. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 87 பேர் அல்லது 25 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இது சிரேஷ்ட நிலையில் காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களில் 10 வெற்றிடங்கள் அல்லது 11 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் காணப்படுதல் நிறுவனத்தின் செயலாற்றலை மோசமாக பாதிப்பதால் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அப் பதவிகளை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பாக நிலையான கவனம் செலுத்தப்பட்டு தேவையான மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |